# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு

# திட்ட முகாமைத்துவ பிரிவு

## பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டம் படிநிலை II கட்டம் 2

BIA அபிவிருத்தித் திட்டமானது, விமானப் போக்குவரத்துத் துறையில் அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வசதிகளை உருமாற்றல் மற்றும் விரிவுபடுத்துவதை நோக்காகக் கொண்ட குறிப்பிடத்தக்க முயற்சி ஒன்றாகும். ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (JICA) நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் அதி நவீனமான வசதிகளைக் கொண்டதாக நவீன புதிய முனைய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் முனைய கட்டிடத்தை மாத்திரம் உள்ளடக்கியதாகவன்றி, இயந்திரவியல், மின்சாரம் மற்றும் குழாய் பொருத்தல் (MEP), IT உட்கட்டமைப்பு மற்றும் ஜப்பான் பொறியியல் ஆலோசனையுடன் சிவில் பொறியியல் நிர்மாணங்கள் உட்பட இணைந்த வேலைகளின் முழுமையான பரப்பைக் கொண்டுள்ளது.

நிதி அமைச்சின் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி கட்டுநாயக்கவில் BIA வில் உள்ள மேலுள்ள திட்டத்திற்காக பின்வரும் பதவிக்கு தகுதிபெற்ற, சுறுசுறுப்பான இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

# வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படை)

## திட்டப் பணிப்பாளர்

**முக்கிய பொறுப்புகள்:**

திட்டப் பணிப்பாளர் ஒட்டுமொத்த திட்டத்தையும் செயற்படுத்துவது மற்றும் ஒட்டுமொத்த திட்டமிடல், வடிவமைப்பு, ஒருங்கிணைப்பு, செயற்படுத்தல், நிர்மாண கண்காணிப்பின்போது ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு, சோதனை, தரக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளையும் அறிக்கையிடுவது உட்பட செயற்றிட்ட முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்கும் பொறுப்பாவார்.

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணி பட்டம் ஒன்று.

**மற்றும்**

அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் ஒன்றின் அங்கத்துவம் மற்றும் இலங்கை பொறியியல் சபையின் செல்லுபடியான அங்கத்துவம்.

**அத்துடன்**

சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 07 ஆண்டுகளுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 14 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்

ஒப்பந்த நிர்வாகம் மற்றும் பெறுகை முகாமைத்துவத்தில் அனுபவம் பெற்ற மற்றும் முகாமைத்துவ சிவில் பொறியியல் திட்டங்கள் மற்றும்/ அல்லது பன்னாட்டு சுற்றுச்சூழலுடன் (குறிப்பாக வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட) தொடர்புடைய பன்னாட்டு பொறியியல் திட்டங்களில் அதிக ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்ற அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பள வரம்பு:**

தரம் PS 1 ரூபா 200,000.00 தொடக்கம் ரூபா 220,000.00 வரை (மாதாந்த சம்பளம்) அத்துடன் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

**பொது நிபந்தனைகள்:**

65 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் (65 வயதுக்கு மேற்பட்டவர்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்)

EPF இற்கு (ஊழியர் சேமலாப நிதியம்) ஊழியர் 8% பங்களிப்பைச் செய்வதோடு தொழில் வழங்குநர் EPF இற்கு (ஊழியர் சேமலாப நிதியம்) 12% உம் ETF இற்கு (ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்) 3% உம் பங்களிப்புச் செய்வார்.

**தொழில் வழங்கல் விதிமுறைகள்:**

நியமனமானது திட்டத்தின் காலம் மற்றும் செயற்றிறன் தொடர்பான திருப்தி அடிப்படையில் நீடிப்பதற்கான வசதியுடன் ஆரம்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பந்த அடிப்படையில் அமையும்.

**நியமன இடமானது:**

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்**
**திட்ட முகாமைத்துவ பிரிவு,**
**மினுவங்கொட வீதி,**
**நிகந்த,**
**கட்டுநாயக்க.**

**விண்ணப்பங்கள்:**

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவத்தை உள்ளடக்கிய சுயவிபரக்கோவையைக் கொண்ட விண்ணப்பங்களை 2025 ஜுலை 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சிவில் விமானசேவை பிரிவு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு, நிலை 25, மேற்கு கோபுரம் உலக வர்த்தக மையம், கொழும்பு 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

அரச/ அரச சார்பு துறையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**செயலாளர்**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு**
**நிலை 25, மேற்கு கோபுரம்**
**உலக வர்த்தக மையம்**
**கொழும்பு 01**